பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 17 | செவ்வாய்க்கிழமை | 02.09.2025 | அதிர்வு 32

## யாழ். மண்டைதீவில்
## சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும், ஆயிரம் அடிகள் முன்னோக்கி எடுத்து வைக்கும் நோக்கத்துடன், தேசிய மக்கள் சக்தியுடன் வடக்கு 03

# செம்மணிப் புதைகுழியில் நேற்றும் 9 என்புத் தொகுதிகள் அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது 9 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் 02

# செம்மணிப் புதைகுழி குறித்து வெளிப்படையான விசாரணை

## யாழ்ப்பாணத்தில் நேற்று ஜனாதிபதி தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

“செம்மணிப் பகுதியில் உள்ள புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணையை நடத்தி வருகின்றோம். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற புதைகுழி கள் மீண்டும் உருவாகாத நாட்டை உருவாக்குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். 06





திறமைக்கு – தகுதிக்கு – சேவை மூப்புக்கு – பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றமை வழமைதான்.

ஆயினும் பதவி உயர்வுகள் இடையே ‘kicking upstairs’ (மேலே நெட்டித் தள்ளுதல்) என்ற ஒரு விடயமும் உண்டு. இடைஞ்சலாக இருக்கும் ஒருவரை அந்த இடத்திலிருந்து கிளப்புவதற்காக – சர்ச்சை இல்லாமல் மாற்றுவதற்காக – பதவி உயர்வு என்ற பெயரில் அவரை அப்புறப்படுத்துவதை இப்படிக் கூறுவது உண்டு. எல்லாத் துறைகளிலும் இது உண்டு. சில சமயங்களில் இது பதவி உயர்வா அல்லது ஆளை அப்புறப்படுத்துவதற்கான நெட்டித் தள்ளலா என்பதை அடையாளம் காண்பதே கஷ்டமாக இருக்கும்.

இப்போது நீதித்துறையில் வந்திருக்கும் ஒரு பதவி உயர்வு குறித்து பலதரப்பிலும் இவ்வாறு சந்தேகக் கண் கொண்டு நோக்கப்படுவதை உணர முடிகிறது.

பல நீதிவான்களுக்கு மேல்நீதிமன்ற நீதிபதிப் பதவி உயர்வு கிட்டுவதாகத் தெரிகின்றது. 06







## செம்மணிப் புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்ட அகழ்வுப் பணிகளின் 40ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 9 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 218 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 7 மனித என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை மொத்தமாக 198 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வட்ட வடிவிலான சிறிய தாயத்து ஒன்றும், உடைந்த நிலையில் வெள்ளை நிற உலோகங்கள் இணைந்த மோதிரத்தை ஒத்த பொருள் ஒன்றும் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட நிலையில் சான்றுப் பொருள்களாக நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.





## சர்வதேச கிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் ஒரு அடியை முன்னோக்கி எடுத்து வைத்தனர் என்றும், அனைவரும் வைத்த அந்த நம்பிக்கையைப் பாதுகாத்து, இலங்கை தேசம் கட்டியெழுப்பப்படும் வரை அந்தக் கைகளை விட்டுவிடப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மண்டைதீவில் நிர்மாணிக்கப்படும் யாழ். சர்வதேச கிரிக்கட் மைதானத்தின் நிர்மாணப் பணிகளை நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நீண்டகால திட்டத்தின் கீழ், மண்டைதீவை சர்வதேச அளவிலான வசதிகளுடன் கூடிய ‘விளையாட்டு நகரமாக’ மாற்றுவதற்கான வேலைத்திட்டமும் இங்கு முன்வைக்கப்பட்டது.

நீச்சல் தடாகம், ஏனைய விளையாட்டுகளுடன் கூடிய இந்த விளையாட்டு நகரம் முழுமையான வசதிகளுடன் கூடிய உள்ளக விளையாட்டு வளாகம், நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களைக் கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கட் மைதானம் நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் முதற்கட்டமாக போட்டிகளை நடத்தும் வகையில் மைதானம் மற்றும் விளையாட்டு அரங்கு அமைக்கப்படவுள்ளது.

பிரதான பார்வையாளர்கள் அரங்கம் மற்றும் ஊடக அரங்கம் இரண்டாம் கட்டத்திலும், மீதமுள்ள பார்வையாளர்கள் அரங்குகள் மூன்றாம் கட்டத்திலும் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இறுதி கட்டத்தில் மின்விளக்குக் கட்டமைப்பு நிறுவப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வேலணை பிரதேச சபையால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்படும் இந்த சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில், சுமார் 40 ஆயிரம் பார்வையாளர்களுக்கு போட்டிகளைக் கண்டுகளிக்கலாம்.

யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானம், சர்வதேச அளவிலான பகல் – இரவு போட்டிகளை நடத்த வசதிகளுடன் இலங்கையில் நிர்மாணிக்கப்படும் ஐந்தாவது மைதானமாகவும், சர்வதேச போட்டிகளை நடத்தக்கூடிய ஏழாவது மைதானமாகவும் வரலாற்றில் இடம்பிடிக்கும்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறுகையில், கிரிக்கெட் என்பது இலங்கையின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சென்ற ஒரு விளையாட்டு என்று தெரிவித்தார்.

விளையாட்டு அனைத்து தடைகளையும் வேறுபாடுகளையும் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, இன்று நிர்மாணிப் பணிகள் தொடங்கும் யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானம் வெறும் ஒரு மைதானம் மட்டுமல்ல, நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பாகும் என்று சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் சிங்களம், தமிழ் மற்றும்முஸ்லிம்இளைஞர்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசிய கிரிக்கெட் அணியையும், அனைத்து இன மக்களும் ஒரே அரங்கில் ஆரவாரம் செய்யும் ஒரு நாட்டையும் உருவாக்குவதே தனது கனவு என்று கூறிய ஜனாதிபதி, அதை நனவாக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆண்டு இறுதிக்குள், யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முதல் கிரிக்கெட் போட்டி நடைபெறும் என்றும், முதல் சர்வதேச போட்டி 3 ஆண்டுகளுக்குள் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தத ஜனாதிபதி, விளையாட்டில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எடுத்த இந்த நடவடிக்கையை பாராட்டி அதற்கு நன்றி தெரிவித்தார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# செம்மணிச் சந்தியில் வன்வம் நூல் வெளியீடு


கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணைகளின் தொகுப்பான “வன்வம்” நூல் வெளியீடு இன்று மாலை 4 மணிக்கு செம்மணிச் சந்தியில் இடம்பெறவுள்ளது.

இந் நூலை பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ் தொகுத்துள்ளார்.

தமிழர் வாழ்வுரிமை மையம் ஏற்பாடு செய்துள்ள இந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு, தெ.மதுசூதனன் தலைமை தாங்கவுள்ளார்.

அத்துடன், முக்கியஸ்தர்கள் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.





# பருத்தித்துறையில் நகரில் கையெழுத்து போராட்டம்

செம்மணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மனிதப் புதைகுழிகளுக்கும், தமிழருக்கு எதிரான இனப் படுகொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் பருத்தித்துறையில் நடைபெற்றது.

பருத்தித்துறை நகர் பகுதியில் நேற்று முற்பகல் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது அதிகளவான மக்கள் கலந்து கொண்டு தமது கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர்களின் மூவர் வடக்கிலிருந்து பதவி உயர்வு பெறுகின்றனர். பருத்துத்துறையில் இருந்து நீதிவான் சுயநிதிபாலன், சாவகச்சேரியில் இருந்து நீதிவான் ஜூட்ஸன் ஆகியோருடன் யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜாவும் மேல் நீதிமன்றத்திற்கான நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்றனர்.

இதில் முக்கியமானவர் நீதிவான் ஆனந்தராஜா. நேற்று வரை, தற்போது உலகமே பேசும் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை யாரும் விமர்சனம் சொல்ல முடியாத வகையில் நேர்த்தியாக முன்னெடுத்து வருபவர்.

இப்போது கொடுக்கப்பட்ட பதவி உயர்வில் சிரேஷ்ட ஒழுங்கில் கடைசியாக இருப்பவர் அவர். அதாவது அவர் வரையான சிரேஷ்ட நிலைக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகின்றது.

இது, இந்தப் பதவியுயர்வு சேவை மூப்பின் அடிப்படையில் அவருக்குக் கிட்டுவதாக இருந்தாலும் கூட, செம்மணிப் புதைகுழி விவகாரத்தை எந்த மாசு, மறுவும் இன்றி சட்டப்படி முன்னெடுத்துச் சென்ற ஒருவருக்கான உண்மையான பதவி உயர்வா அல்லது அவரை இடமாற்ற அல்லது அவ்விடயத்தில் வேறு வகையில் தலையிட முயன்றால் அது பெரும் நெருக்கடியைக் கொண்டு வரும் என்பதற்காக மாற்று வழியில் கையாளப்படும் தந்திரமா என்பதை இனித்தான் பார்க்க வேண்டும். புதிதாக அவரது பதவிக்கு வருபவர் செம்மணி புதைகுழி விவகாரத்தை கையாண்டு கொண்டு செல்லும் வேகத்தில் இது உண்மையான பதவி உயர்வா அல்லது மாற்றத்திற்கான நெட்டித்தள்ளலா என்பதை உணரக்கூடியதாக இருக்கும் என நினைக்கிறேன்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான வழக்கு நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் நவம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழக்கு இப்போது போகின்ற போக்கை அவதானிக்கும் போது, அது முடிந்து தீர்ப்பு வருவதற்கு மூன்று, நான்கு ஆண்டுகள் எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை.

மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியை விட்டு விலகிப் பின்னர் காலமான நிலையில், இப்போதைய தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை மற்றொரு எதிர்மனுதாரராகப் பிரதியீடு செய்வதற்கு நேற்று நீதிமன்றம் அனுமதி அளித்தது. அவர் தமது பதில் மனுவை நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கக் கேட்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் கட்சியின் உறுப்பினர் ஒருவரை இடையீட்டு எதிர்மனுதாரராக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் தொடர்பில் சட்டத்தரணி குருபரன் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆனார்.

வன்னியைச் சேர்ந்த இந்த மனுதாரரின் இடையீட்டு எதிர்மனுதாரருக்கான கோரிக்கைக்கு மனுதாரர் தரப்பு நேற்று ஆட்சேபனை மனு தாக்கல் செய்திருந்தது. ஏனைய எதிர்மனுதாரர்கள், இந்த இடையீட்டு எதிர்மனுதாரராக சேர்க்கும் கோரிக்கைக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால் அவற்றையும் சமர்ப்பிக்கும் படி நீதிமன்றம் நேற்றுக் கேட்டுக் கொண்டது.

நவம்பர் 4ஆம் திகதி இந்த இடையீட்டு எதிர்மனுதாரரின் கோரிக்கை தொடர்பில் நீதிமன்றம் விசாரணை செய்து பின்னர் தீர்ப்பளிக்கும். அதன் பின்னர்தான் தமிழரசுக் கட்சியின் இந்த வழக்கு தொடர்பான மூல விடயத்துக்குள் நீதிமன்றம் இறங்கும். அப்படி நீதிமன்றம் மூல விடயத்தை விசாரணைக்கு எடுத்து, வழக்கை முடிவுறுத்துவதற்கு இப்போது அது போகும் போக்கின்படி கணித்தால் குறைந்தது இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு மேலாகும் என்பது தெளிவாகிறது.

கட்சியின் தேசிய மாநாட்டை உடனடியாக நடத்தினால் அதை எதிர்கொள்ள திராணியற்ற தரப்புகள் வழக்கை எப்படியாவது இழுத்தடிப்பது என்பதில் கங்கணம் கட்டி இருப்பதாகத் தெரிகிறது.

வழக்கை இப்போது திட்டமிட்டு யார் இழுத்தடிக்கிறார்கள், வழக்கை முடித்து, தேசிய மாநாட்டை சந்திக்க அஞ்சும் தரப்பு யார் என்பவை தமிழரசு கட்சி உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே அது குறித்து நான் எதுவும் பிரஸ்தாபிக்காமல் விட்டுவிடுகிறேன்.

நேற்றைய விசாரணைகளின் போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தமக்காகத் தாமே முன்னிலையானார். கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம். முன்னாள் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி., நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரின் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையானார். சிவஞானம், சிறிதரன் எம்.பி., எஸ்.குகதாசன் எம்.பி. ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன் முன்னிலையானார்.

---

## செம்மணிப் புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த ஆண்டுக்குள், அரசுடனான அனைத்து பணக்கொடுக்கல் வாங்கல்களையும் இணையவழியில் செய்யும் வசதி பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தற்போதைய அரசின் முன்னுரிமைத் திட்டமாக டிஜிட்டல் மயமாக்கலுடன், இவ்வளவு காலமும் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் தொலைதூர கிராமங்களுக்குப் பரவலாக்கப்பட்டு, அரசால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பணிகளை, மிக நெருக்கமாகப் பெற்றுக் கொள்ள மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகம், நவீன தொழில்நுட்பம் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது.

இதுவரை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகளைப் பெறுவதற்கு வடக்கு மாகாணத்தின் ஒரே பிராந்திய அலுவலகமான வவுனியா பிராந்திய அலுவலகத்துக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது.

வடக்கு மாகாணத்தில் இருந்து கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், இலகுவாக அந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்தப் பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மக்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு சேவைகள் வழங்குவதைக் குறிக்கும் வகையில், மூன்று கடவுச்சீட்டுகளை ஜனாதிபதி நேற்று வழங்கி வைத்தார்.

பின்னர், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு, அரசியல் அதிகாரம் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும் அரச அதிகாரிகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வரும் அதே வேளை, பணத்துக்காக அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தத் தயங்கமாட்டோம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போது, இந்த நாட்டிலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் நாட்டுக்கான தங்கள் கடமையை நிறைவேற்ற வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான அரச சேவை அவசியம் என்றும், உலகில் முன்னேற்றம் அடைந்த அனைத்து நாட்டினதும் முன்னேற்றத்துக்குப் பின்னால் வலுவான அரச சேவை இருக்கின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியதாவது:-

"இன்று, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய அலுவலகத்தில் இருந்து சேவைகளைப் பெறும் வசதியை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

ஒரு அடையாள ரீதியாக குடிவரவு மற்றும் குடியகல்வு அனுமதிகளை வழங்குவதற்காக இது இருந்தபோதிலும், அதனை விட பாரிய நோக்கத்துடன் இந்தப் பணியில் நாம் தலையிட்டுள்ளோம். எமது முழு நிர்வாக அமைப்பும் கொழும்பை மையமாகக் கொண்டுள்ளது. தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல பணிகளுக்காக கொழும்புக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிர்வாகத்தை தொலைதூர கிராமங்களுக்கு பரவலாக்குவதே எமது அரசாங்கத்தின் குறிக்கோள். அரசின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய பணிகளை தமக்கு மிக நெருங்கிய வகையில் பெற்றுக்கொள்ள வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

அடுத்த ஆண்டுக்குள் கணினி மென்பொருள் அமைப்புகள் மற்றும் உங்கள் தொலைபேசி மூலம் அரசுடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் மக்கள் மேற்கொள்ளக் கூடிய வகையில் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம். எமது அரசின் முதன்மையான செயற்பாடு டிஜிட்டல் மயமாக்கல் ஆகும். மேலும், அரச சேவையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் அன்றைய தினம் நடைபெற்ற மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஏழ்ரல் மாதம் கணிசமான

07

## செம்மணிப் புதைகுழி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அளவு சம்பள உயர்வை வழங்குவோம் என்று அறிவித்தேன். நாங்கள் அதைச் செய்தோம். எஞ்சியுள்ள பகுதியை அடுத்த ஜனவரியில் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு வலுவான அரச சேவை அவசியம். முன்னேறிய ஒவ்வொரு நாட்டிலும் வலுவான அரச சேவை உள்ளது. நமது நாட்டில் ஒரு வலுவான அரச சேவையை நாங்கள் உருவாக்கி வருகின்றோம்.

மேலும், உங்கள் கையொப்பத்துக்கு ஒரு சக்தி உண்டு. அந்தக் கையொப்பம் மக்களுக்கு சேவை செய்யப் பயன்படுத்தப் பட்டால், நாங்கள் உங்களை முழுமை யாகப் பாதுகாப்போம்.

ஆனால், அந்தக் கையொப்பம் பணத் துக்காகப் பயன்படுத்தப்பட்டால், சட்டம் அமுல்படுத்தப்படும். நம் நாட்டில் சட்டத் தின் ஆட்சியை நிலைநாட்டும் ஒரு அரசு நமக்குத் தேவை. நமது நாடு சட்டம் காட்டுமிராண்டித்தனமான ஒரு நாடாக வும், அரச நிறுவனங்களின் கௌரவம் அழிக்கப்பட்ட நாடாகவும் மாறியிருந்தது.

மீண்டும் ஒவ்வொரு அரச நிறுவனத் திலும் கௌரவம் நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு அரச அதிகாரிக்கும் கௌரவத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக, அந்த நிறுவனங்களுக்கு நாம் வசதிகளை வழங்கி வருகின்றோம்.

நமது நாட்டைப் புதிதாகக் கட்டியெ ழுப்ப வேண்டிய நிலையில் நாம் உள் ளோம். இந்த வடக்கு மாகாணத்துக்கு எம்மிடம் பாரிய அபிவிருத்தித் திட்டம் உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில், வடக் கின் மக்கள் முதல் முறையாக அரசை அமைக்க வாக்களித்தனர்.

பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் அவ நம்பிக்கை கொண்டிருந்த ஒரு நாடு, அரசின் மீது நம்பிக்கை வைத்தது. இப் போது நாம் செய்ய வேண்டியது, இந்த ஒன்றிணைவு வீழ்ச்சியடைய இடமளிக் காமல், அதை வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு ஒற்றுமை மற்றும் சகோ தரத்துவம் நிறைந்த நாட்டைக் கட்டியெ ழுப்ப வேண்டும்.

தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயற்சிக் கின்றன என்பதை நாம் அறிவோம். இன்று வடக்கு மற்றும் தெற்கிலும் இதே நிலை காணப்படுகிறது.

வடக்கிலோ அல்லது தெற்கிலோ மேற்கொள்ளப்படும் இந்த இனவாத அரசியல் மக்களுக்காக அன்றி அரசி யல்வாதிகளுக்காகவே மேற்கொள்ளப் படுகின்றது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, வடக்கு மற்றும் தெற்கில் உள்ள நாம் அனைவரும் இந்த இனவாத அரசியலை நிராகரிக்க வேண்டும். இன வாதம் மீண்டும் எங்கும் தலை தூக்க அனுமதிக்கக்கூடாது. இதற்காக நாங் கள் மிகவும் கடினமாக உழைத்து வருகின் றோம்.

அரசு என்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டில் மீண்டும் ஒரு போர் வராது என்று நாங்கள் நம்புகின்றோம். யுத்தம் ஒன்று வரும் என்ற சிந்தித்துச்



சிலர் செயற்பட்டார்கள் . மீண்டும் ஒரு போர் நடக்காமல் தடுக்க நாங்கள் உழைத்து வருகின்றோம். மக்களுக்கு முடிந்தவரை காணிகளை வழங்க வேண்டும். மூடப்பட்ட வீதிகளைத் திறக்க வேண்டும். நாம் ஒருவரையொருவர் சந்தேகிக்கக்கூடாது.

மற்றொரு போரைத் தடுக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அந்த மனநிலையுடன் நம் நாட்டைப் பார்க்க வேண்டும். நமது நாட்டை ஒரு புதிய சமூகத்தை நோக்கி இட்டுச் செல்ல வேண் டும். பழைய தோல்வியுற்ற அரசியல் இயக்கங்கள், மதவாதம் மற்றும் சாதிவா தம் என்பவற்றைப் பயன்படுத்தப்படுகின் றன. அவை ஒரு நூற்றாண்டுக்கும் முந்



திய காலத்திற்குரியவை. இன்று, இனம், மதம், சாதி அல்ல, மனிதநேயம் தான் பிரதான காரணி. எனவே, அனைத்து பிளவுகளும் மனிதநேயத்திற்கு அடி பணிய வேண்டும். மனிதநேயத்தை அனைத்தையும் விட உயர்வாக கருதும் ஒரு நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதுதான் நம் நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலமாகும்.

மண்ணைத் தோண்டும்போது, பழைய எலும்புக்கூடுகள் வெளிப்படுகின்றன என்பதை நான் அறிவேன். இப்போது, செம்மணிப் பகுதியில் உள்ள புதை குழிகள் குறித்து மிகவும் வெளிப்படை யான விசாரணையை நடத்தி வருகின் றோம், இது பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது. இதுபோன்ற புதைகுழிகள் மீண்டும் உருவாகாத நாட்டை உருவாக் குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

தற்சமயம், நம் நாட்டிற்கு அவசிய மானவற்றை நாம் செய்து வருகிறோம். நமது மதத் தலைவர்கள், அரசியல் அதி காரம், அரச அதிகாரிகள் மற்றும் பாது காப்பு பிரதிநிதிகள், நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் செயற்படுவோம். அரசியல் அதிகாரம் என்ற வகையில் நம் தரப்பில் இருந்து நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். இந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றாகக் கட்டியெழுப்புவோம்.” – என்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடா ளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காணி மற் றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சமிந்த பதிராஜ, யாழ். மாவட்ட செயலாளர் எம். பிரதீபன் மற்றும் அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# யாழ். பொது நூலக மின் நூலகத் திட்டம் ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நூலகத்தை மின் நூலகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் நேற்று காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்காக jaffna.dlp.gov.lk என்ற இணையத்தளம் அறிமுகப்படுத்தப் பட்டது.

இந்தத் திட்டம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒன்லைன் ஊடாக வாசிக்க வாய்ப்பளிக்கும்.

யாழ்ப்பாணம் மக்களின் பெருமையின் அடையாளமாக விளங்கும் யாழ்ப்பாணம் பொது நூலகம், ஆசியாவிலேயே மிகப்பெரிய புத்தகங்களின் தொகுப்பைக் கொண்ட நூலகமாகும். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் உட்பட ஏராளமான மக்களால் தினமும் பயன்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் ஸ்மார்ட் அட்டை பிரவேச வசதி மற்றும் விசேட தேவை உள்ளவர்களுக்கு உதவி தொழில்நுட்பத்துடன் கூடிய விசேட அலகும் இதன் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

2025 வரவு - செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்துக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மின் நூலகத் திட்டத்தை உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைத்த ஜனாதிபதி, அதன் வாசிப்பு அறை மற்றும் புத்தகம் வழங்கும் பிரிவுக்கும் விஜயம் செய்த அதே வேளையில், பணியாளர்களுடன் சுமுகமாக உரையாடலில் ஈடுபட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், யாழ். நூலகர் மற்றும் பணியாளர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் வங்குறோத்து

ஆண்டாண்டு காலமாக நாட்டை ஆண்டு வந்த அரசுகளின் தீர்க்கதரிசனமற்ற - பொறுப்பற்ற - குளறுபடியான - திறனற்ற - ஊதாரித்தனமான - ஊழல், மோசடிகள் நிறைந்த - ஆட்சிப் போக்கினாலும் முறையற்ற செயற்றிட்டங்களினாலும் நாடு 2022 இல் வங்குறோத்து நிலையை அடைந்தது.

அந்த நிலையை நாடு எட்டியமையை அடுத்து, நாட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடியில் இருந்து தற்காலிகமாக அது இப்போது சற்று மீண்டிருக்கின்றது. ஆனால் அதன் அர்த்தம் வங்குறோத்து நிலையிலிருந்து நாடு மீண்டுவிட்டது என்பதல்ல.

காலம் காலமாக வெளிநாடுகளிடமிருந்தும் வெளித் தரப்புகளிடமிருந்தும் உள்நாட்டிலும் கண்மூடித்தனமாகக் கடன்களை வாங்கிக் குவித்து, அதில் ஆட்சியை நடத்திச் சென்ற அரசுகள் கடன் மீளளிப்புக்கான திட்டங்கள் இல்லாமலேயே காலத்தை கொண்டிழுத்து தங்கள் வேலையை முடித்துச் சென்று விட்டன. அந்தக் கடன்களை கட்ட முடியாமல்தான் நாடு வங்குறோத்து நிலையை அடைந்தது.

அதனை அடுத்து நாட்டில் பெரும் நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டனர். எல்லாவற்றுக்கும் கியூ. அடுத்த வேளை என்னாகும் என்ற நெருக்கடி. இந்தச் சமயத்தில்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியோடு கடன் மீளளிப்புத் தொடர்பான திட்டத்தை புதிய ஏற்பாட்டுக்கு அமைய ஒழுங்கு படுத்தினார்.

அதன்படி 2028 வரை தற்போதைய கடன் நிலுவைக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தி வைக்கவும், 2028 முதல் பழைய கடன்களை உரிய தவணைப்படி செலுத்தவும் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

ஆக வங்குறோத்து நிலையிலிருந்து நாடு மீளவில்லை. கடன் மீளளிப்பு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். 2028 இல் கடன் மீளளிப்பு செலுத்தும் நிலைமை - கட்டாயம் - வரும்போது நாடு மீண்டும் வங்குறோத்து நிலையை அடைவது தவிர்க்க முடியாதது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்திருக்கின்றார்.

இலங்கை தனது 5.5 பில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்துவதற்குப் போதுமான பொருளாதார வளர்ச்சியைப் பேணத் தவறியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனால் 2028 ஆம் ஆண்டு - கடன் மீளளிப்பைச் செய்ய வேண்டிய சமயத்தில் நாடு மீண்டும் வங்குறோத்து நிலையை அடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

அம்பாறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளுமாறு தாம் அரசாங்கத்திற்கு முன்மொழிவுகளை வழங்கினார் எனவும், ஆனால் அதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது முன்மொழிவுகளை அரசாங்கம் உதாசீனம் செய்வதாகத் தென்படுகிறது என அவர் கருத்து வெளியிட்டார்.

கடன் மீளளிப்பை அது வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சாவகாசமாக இருப்பது கடைசியில் நாட்டை மீளவே முடியாத பெரும் நெருக்கடியில் கொண்டு போய் மாட்டி விடும் என்பது நிச்சயம்.



# மூதூர் மத்திய கல்லூரியில் தீ விபத்து உபகரணங்கள் எரிந்து சாம்பலாகின!

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் மத்திய கல்லூரியின் களஞ்சியசாலையில் நேற்றுத் திங்கட்கிழமை பகல் திடீரெனத் தீப் பரவல் ஏற்பட்டு பாடசாலை உபகரணங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இந்த விபத்துச் சம்பவத்திற்கு மின் ஒழுக்குக் காரணமாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

தீ பரவியதையடுத்து பொதுமக்கள், பிரதேச சபை ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் இணைந்து நீரை வாரி இறைத்துத் தீயை அணைத்து, தீப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சுமார் அரை மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



இதன்போது மூதூர் மத்திய கல்லூரியின் களஞ்சியசாலையில் காணப்பட்ட கதிரை,மேசை,ஏனைய பெறுமதியான பல உபகரணங்கள் தீயில் எரிந்து சேதமாகியுள்ளன. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# வவுனியா வடக்கு பிரதேச சபையின் அலுவலர்கள் தவிசாளரின் கெடுபிடிக்கு எதிராகப் போர்க்கொடி

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தவிசாளரின் அணுகுமுறைச் செயற்பாடுகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து அலுவலகத்தில் இருந்து வெளியேற முற்பட்ட நிலையில் உப தவிசாளரின் கோரிக்கைக்கு இணங்க அந்த நடவடிக்கையைத் தற்காலிகமாகக் கைவிட்டனர்.

வவுனியா வடக்குப் பிரதேசசபை தவிசாளர் தொடர்ச்சியாக நிர்வாக செயற்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றார் எனக் குற்றம் சாட்டி, செயலாளர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகி, அலுவலகத்தில் இருந்து வெளியேறுவதற்கும் தீர்மானித்திருந்தனர்.

உத்தியோகத்தர்களுடன் கடும் தொனியில் செயற்பட்டு வருகிறார் எனவும், ஆண் உத்தியோகத்தர்கள் முகச்சவரம் செய்ய வேண்டும், சப்பாத்து அணிய வேண்டும் என்பன போன்ற கட்டுப்பாடுகளை விதிக்கின்றமையோடு களஞ்சிய காப்பாளர் களஞ்சியசாலைக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பது போன்ற உத்தரவுகளையும் பிறப்பித்து செயலாளருடனும் முரண்படுவதனாலுமே இந்நிலை தோன்றியுள்ளது எனவும் கூறப்பட்டது.

இதன் காரணமாக நேற்றைய தினம் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் சிலர் அலுவலகத்தில் இருந்து வெளியேறி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவிருந்தமையுடன் உயர் அதிகாரிகளிடம் முறையிடவும் முனைப்பு எடுத்த போதிலும், உப தவிசாளர் வி.சஞ்சுதன் மற்றும் இரு ஆளும் கட்சி உறுப்பினர்கள் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களிடம் விநயமாக 5 நாள் அவகாசம் கேட்டமையுடன் தாம் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பார்கள் எனத் தெரிவித்தமயை அடுத்து உத்தியோகத்தர்கள் தமது செயற்பாட்டைக் கைவிட்டுள்ளனர்.




# 30 ஆவது நாளாக மன்னாரில் போராட்டம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிரான – சுழற்சி முறையிலான கவன வீர்ப்புப் போராட்டம் நேற்றைய தினம் திங்கட்கிழமை 30 ஆவது நாளாகவும் இடம் பெற்றது. கற்கடந்தகுளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நேற்றுக் கலந்து கொண்டு தமது ஆதரவை போராட்டத்திற்கு வழங்கினர்.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகின்ற இந்தப் போராட்டத்தில் நேற்று கற்கடந்தகுளம் கிராமத்தை சேர்ந்த ஏராளமான பெண்கள் மற்றும் பெரியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 'காற்றாலை எம் கண்ணீரின் கதை சொல்லும்', 'நாட்டை விற்று அபிவிருத்தி எதற்கு?', 'அரசே! எமது உயிரோடு விளையாடதே!', 'காற்றாலை அமைத்து எமது மண்ணைக் கருவறுக்காதே!', 'சொந்த மண்ணிலே அகதியாகும் நிலை வேண்டாம்!' என்பன போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் பிரதான சுற்று வட்டப் பகுதியில் இருந்து மன்னார் மாவட்ட செயலகம் வரை பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக சென்று தமது எதிர்ப்ப. அவர்கள் வெளிப்படுத்தினர்.













# ரணிலின் அரசில் பொஸ்பேட் ஏற்றுமதியில் ஊழல் வழக்கை விசாரணைக்கு ஏற்றது உயர் நீதிமன்றம்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை முன்னெடுத்து விசாரணை நடத்த நேற்று உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த இந்த மனுவில், முந்தைய அரசின் காலத்தில் எப்பாவளவில் இருந்த பொஸ்பேட் கையிருப்புகள், சந்தை விலையை விட குறிப்பிடத்தக்க வகையில் குறைந்த விலையில், தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும், இதன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டன எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மனுவில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கத் திணைக்களம், அதன் பணிப்பாளர் நாயகம், சட்ட மா அதிபர் உள்ளிட்ட 32 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



இந்த மனுவை நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு நேற்றுப் பரிசீலித்துள்ளது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ரவீந்திரநாத் தபரே, 2000 ஆம் ஆண்டில் எப்பாவல பொஸ்பேட் கையிருப்பு தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை மீறி, லங்கா பொஸ்பேட் நிறுவனம் பங்குகளை பெற்றுக்கொண்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த பொஸ்பேட் கையிருப்புகள் சர்வதேச சந்தை விலையை விட மிகவும் குறைந்த விலையில் தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும் அவர் கூறினார்.

இதன் மூலம் அரசுக்கும் பொது மக்களுக்கும் பெரும் நிதி இழப்பு ஏற்பட்டதாக மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த நேரத்தில் இந்த விஷயத்தை மேற்பார்வையிட்ட முன்னாள் அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பொஸ்பேட் வெளியீட்டிற்கு தேவையான உரிமங்களை வழங்க புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுத்தார் எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதன்படி, முன்மொழிவுகளை ஆராய்ந்த பிறகு, உயர் நீதிமன்றம் இந்த மனுவை 2026 மார்ச் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டுள்ளது.

# ஜனாதிபதி திறந்து வைத்த திட்டக் கற்களில் நிதி பற்றிய வெளிப்படைத்தன்மை இல்லை!

## வலி கிழக்கு தவிசாளர் நிரோஷ் விமர்சனம்







ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திறப்புவிழா கற்களில் நல்லாட்சிக்கு அவசியமான வெளிப்படைத்தன்மையும் தகவல் அறிவதற்கான சுதந்திரமும் மீறப்பட்டுள்ளன. .ஆகவே அக்கற்களில் காணப்படும் தவறுகள் உரியவாறு மறுசீரமைக்கப்படுவது மக்களின் தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமையினை உறுதிப்படுத்தும் என்பதுடன், அரச நிதி செலவிடப்படுவதன் வெளிப்படைத் தன்மையினையும் அதிகாரிக்கும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கடவுச்சீட்டு அலுவலகம் மற்றும் விளையாட்டுத்திடல், துறைமுகம் என்பவற்றின் ஆரம்பப் பணிகளை மேற்கொண்டார். அவரினால் கடந்த ஆட்சியாளர்களைப் போல் ஆரம்ப நிகழ்வுகளுக்கு பெரும் பணம் செலவிடப்படாமை, எளிமையான முறையில் மேற்படி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். எனினும் நல்லாட்சித்தத்துவம் மீறப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் திறப்பு விழாக் கற்களில் மக்களின் பணம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச நிதி என்பது மக்களின் பணம் ஆகும். அதனை தொகைகளைக் குறிப்பிடாது மேம்போக்காகக் குறிப்பிட்டதனை நாம் அறிவார்ந்த பார்வையில் விசேடமான மாற்றம் என்று கூற முடியாது. அரச நிதியில் எவ்வளவு தொகை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படாமல் விடப்பட்டமை அரசின் நிதி தொடர்பான வெளிப்படைத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றது. நிதி செலவிடலில் தொகைகள் வெளியிடப்படும் போதே மக்களின் நிதி காத்திரமாகப் பயன்படுத்தபப்பட்டதா என பொதுமக்களால் விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே மக்கள் தகவல்களை பெறுவதற்கான வழிமுறையை இலகுபடுத்தவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளமை கவலையளிக்கின்றது. பொது நிதி தொடர்பில் பொறுப்புச் சொல்வதற்கான அரசியல், பொருளாதார ரீதியானதும் நல்லாட்சியின் அளவு கோலுக்கான கல்விசார் அடிப்படையுமாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் அரசாங்கங்கள் திட்டங்களை ஆரம்பிப்பதும் பின்னர் கைவிடுவதும் சகஜமாகும். அவ்வாறான நிலைக்கு போதுமான நிதித்திட்டமிடல் இன்றி அபிவிருத்திகளை அரசியல் ரீதியில் ஆரம்பிப்பதும் ஒரு காரணமாகும். அடுத்து மேலதிக நிதியின்றியும் திட்டங்கள் தடைப்படுகின்றன. சில திட்டங்கள் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையினால் தோல்வி அடைகின்றன. அவ்வாறான நிலையில் அப்படியாக தோல்வியடையும் கட்டுமானங்கள் பற்றி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் அதேவேளை, மக்களின் தீர்ப்பிற்கு அரசியல் தலைவர்கள் முகங்கொடுக்க வேண்டும் என்பது சனநாயக சம்பிரதாயம். ஆகவே ஜனாதிபதின் பெயர் குறிப்பிடப்பிட்டால் திட்டத்தின் வெற்றி – தோல்விகள் பற்றி மக்கள் மதிப்பிடுவது இலகுபடுத்தப்படும்.

திட்டங்களின் வெற்றி தோல்விகளின் பொறுப்புக்கூறலை வரலாற்று ரீதியில் தலைவர்கள் பெறுவர்கள் என்ற நியதியை உணர்த்தும். ஆகவே தலைவர்கள் சரியான நிபுணத்துவத்துடன் செயற்படுவதற்கு அது வழிநடத்தும். ஆகவே இவை ஜனாதிபதியினால் யாழில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டக் கற்களில் மீறப்பட்டுள்ளன. எனவே இதுபற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்து அந்தத் திறப்புவிழாக் கற்களின் அருகில் நிதி செலவு அல்லது ஒதுக்கம் பற்றி வெளிப்படுத்தி உதவவேண்டும். – என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



# ராஜித சேனாரத்ன, லான்சாவிற்கு வீட்டுச் சாப்பாட்டுக்கு அனுமதி

ராஜித சேனாரத்ன மற்றும் நிமல் லான்சா ஆகியோருக்கு வீட்டிலிருந்து உணவை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருவரும் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டமொன்றை கொரிய நிறுவனமொன்றுக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு 2 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நீர்கொழும்பு நகர சபை உப தலைவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# மஹிந்தவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும்

## சரத் பொன்சேகா வலியுறுத்தல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவின் 2010 ஆட்சிக் காலத்திலேயே கடுமையான ஊழல்கள் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

நிகழ்வு ஒன்றில் பேசிய, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அடுத்தடுத்து வந்த இலங்கைத் தலைவர்களையும் விமர்சித்துள்ளார்.

அவர்களுக்கு தேசிய வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்கப்பூரின் லீ குவான் யூ, மலேசியாவின் மகாதீர் முகமது மற்றும் ருவாண்டாவின் ஜெனரல் ஜ/வெனல் போன்ற சர்வதேச பிரமுகர்கள், ஊழலுக்கு எதிராக வலுவான நிலைப்பாடுகளை எடுத்தனர் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உகாண்டாவிலிருந்து, திருப்பதிக்குப் பறக்க ஒரு தனியார் ஜெட் விமானம் அழைக்கப்பட்ட நிகழ்வையும் சரத் பொன்சேகா நினைவு படுத்தியுள்ளார்.

ராஜபக்ஷவின் தலைமையில்,





சீனாவுக்கு 2010 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரச முறை பயணத்தின் போது 65 பேர் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் அதிகாரபூர்வமாக அழைத்துச் செல்லப்பட்டனர் என சரத் பொன்சேகா சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளையும் சரத் பொன்சேகா விமர்சித்துள்ளார்.

எனினும், அதிகாரிகளைப் பொறுப்புக்கூற வைப்பதில் தற்போதைய நிர்வாகம் வகுத்த முன்னுதாரணத்தை தாம் ஆதரிப்பதாக பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் தலைவிதியைப் பார்ப்பது தமக்கு வருத்தமாக இருக்கிறது. அவரே தம்மை அரசியலுக்கு அழைத்து வந்தவர்.

எனினும், அவருடைய கைது விடயத்தில் நடப்பு அரசாங்கம் மேற்கொண்ட முன்னுதாரணத்தை தாம் ஏற்றுக் கொள்வதாக பொன்சேகா கூறியுள்ளார்.

அந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில், ராஜபக்ஷ போன்ற ஒருவருக்கு சுமார் 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

# பல பொலிஸ் உயர் பதவிகளில் விரைவில் மாற்றம் செய்யப்படும்



பல சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் இடமாற்றம் பெற உள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

பொலிஸ் நிர்வாகம், குற்றம் மற்றும் போக்குவரத்து, ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி துறைகள், ஊவா மாகாணம், மேல் மாகாணம், வடமத்திய மாகாணம் உள்ளிட்ட பல மாகாணங்களில் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைகள் அடுத்த சில நாள்களில் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், இது தொடர்பாக இதுவரை எந்த பரிந்துரைகளும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கவில்லை என்றும் அடுத்த சில நாள்களில் அவை பெறப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் தேசிய பொலிஸ் ஆணைகுழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் சமர்ப்பித்த பரிந்துரைகள் அடுத்த வியாழக் கிழமை கூட்டத்துக்குப் பின்னர் தேசிய காவல்துறை ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

பொலிஸ் மா அதிபர் சமர்ப்பித்த பரிந்துரைகளை அங்கீகரிக்கவோ அல்லது அங்கீகரிக்காமல் இருக்கவோ தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் அரசாங்கத்தால் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந் நிலையில் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் அரசாங்கத்தால் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான நிலைமையில் தான் தாக்குதல்கள் நடைபெற்ற போது கிழக்கு கட்டளை தளபதியாக செயற்பட்டவர் இன்று பிரதி பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கின்றார்.

இதனை அடிப்படையாகக் கொண்டே சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்தன.

ஆனால் சபாநாயகரால் இதுவரை இது தொடர்பில் எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்படவில்லை. இது நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு புறம்பானதல்ல என சட்டமா அதிபர் சபாநாயகருக்கு அறிவித்திருக்கின்றார்.

எனவே இது குறித்த விவாதத்துக்கு பொறுத்தமான தினமொன்றை சபாநாயகரால் ஒதுக்க முடியும். இது தொடர்பில் விவாதம் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தொடர்பில் தெரிந்து கொள்ள வேண்டிய உரிமை பொது மக்களுக்கு உண்டு.

இந்த விவகாரத்தில் சபாநாயகரின் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அஞ்சப் போவதில்லை எனக் கூறும் அரசாங்கம் அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கு ஏன் தயங்குகிறது? ஜே.வி.பி.யின் தேசிய பட்டியல் வேட்பாளரே இப்ராஹிம் ஆவார்.

இப்ராஹிம்மின் பிள்ளைகள் மற்றும் மருமகள் ஆகியோரே தற்கொலை குண்டு தாக்குதல்களின் பிரதான சந்தேகநபர்களாவர். இதற்கான நிதி உதவிகளை உள்நாட்டில் அவர்களே வழங்கியிருக்கின்றனர்.

அரசாங்கம் இந்த விவாதத்தை தடுப்பதற்கு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் அவ்வாறு தடுப்பதற்கு அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் கிடையாது."– என்றார்.

# உக்ரைன் உடனான மோதலினை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

## புடினிடம் மோடி வலியுறுத்தல்

உக்ரைன் உடனான மோதல் கூடிய விரைவில் முடிவுக்கு வரப்பட வேண்டும் எனவும் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் இது ஒட்டுமொத்த மனித நேயத்தின் அழைப்பு என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்பின்போது பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



சீனாவின் தியான்ஜினில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டுக்கு இடையே பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேற்று சந்தித்துப் பேசினார். இதற்காக இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் இடத்துக்கு இருவரும் ஒரே காரில் பயணித்தனர்.

இந்த சந்திப்பின்போது, பொருளாதாரம், நிதி, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். இத்துறைகளில் இருதரப்பு உறவுகளில் நீடித்த வளர்ச்சி நிகழ்வது குறித்து, அவர்கள் திருப்தி தெரிவித்தனர்.

மிகவும் கடினமான காலங்கள் உட்பட அனைத்து காலங்களிலும் இந்தியாவும் ரஷ்யாவும் தோளோடு தோள் நின்று செயல்பட்டு வருகின்றன என தெரிவித்த பிரதமர் மோடி, இந்தியா - ரஷ்யா உறவு இரு நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது, உலகின் அமைதி, நிலைத்தன்மை, வளம் ஆகியவற்றுக்கும் மிகவும் முக்கியமானது என கூறினார்.

உக்ரைன் குறித்த சமீபத்திய நிகழ்வுகள் உள்ளிட்ட உலகளாவிய மற்றும் பிராந்திய விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். உக்ரைனில் நிலவும் மோதல்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய முயற்சிகளுக்கு பிரதமர் மோடி ஆதரவு தெரிவித்தார். மேலும், மோதலை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து நீடித்த அமைதியை நிலவச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில்,

“உக்ரைனில் நிகழ்ந்து வரும் மோதல் குறித்து நாம் தொடர்ந்து விவாதித்து வருகிறோம். அமைதியை ஏற்படுத்துவதற்காக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆக்கப்பூர்வமான முறையில் அனைத்துத் தரப்பும் முன்னேறும் என நாங்கள் நம்புகிறோம். கூடிய விரைவில் மோதலை முடிவுக்கு வருவதற்கான பாதையை கண்டறிய வேண்டும். அதன்மூலம் அமைதியை நிலைநாட்ட வேண்டும். இது ஒட்டுமொத்த மனிதத்தின் அழைப்பு.

உங்களுடனான சந்திப்பு எப்போதும் நினைவில் கொள்ளத்தக்கதாக எனக்கு இருக்கிறது. பல்வேறு தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பை நாங்கள் பெற்றுள்ளோம். நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். இரு பக்கத்திலும் ஏராளமான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடந்து வருகின்றன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள இந்தியா - ரஷ்யா 23 ஆம் ஆண்டு இருதரப்பு உச்சி மாநாட்டுக்கு நீங்கள் (புடின்) வருவதை 140 மக்களும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். இரு நாடுகளுக்கும் இடையே இருக்கும் ஆழமான, விரிவான, சிறப்பான நட்புறவை இந்த சந்திப்பு உணர்த்துகிறது.” என தெரிவித்தார்.

# புதுச்சேரியில் காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிடுவதற்கு சென்ற பா.ஜ.கவினர்

## நகர் முழுவதும் கடும் நெரிசல்





ஒருபுறம் ராகுல் மன்னிப்பு கேட்க கோரி புதுவை காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட சென்ற பா.ஜ.கவினர். மறுபுறம், மோடி பதவி விலகக் கோரி அலுவலகம் முன்பு காங்கிரஸ் கட்சியினர் கோஷம் எழுப்பினர். இதனால் நகரெங்கும் கடும் நெரிசல் ஏற்பட்டது.

பிஹாரில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்ட மேடையில் பிரதமரையும், அவரது தாயாரையும் தரக்குறைவாக பேசிய காங்கிரஸ் கட்சியினரை கண்டித்தும், ராகுல் காந்தி மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் புதுச்சேரி பா.ஜ.கவினர் சுதேசி மில் அருகில் இருந்து பேரணியாக புறப்பட்டு காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட சென்றனர். இதில், பா.ஜ.க. மாநிலத் தலைவர் ராமலிங்கம் தலைமையில் அமைச்சர் ஜான்குமார், எம்.எல்.ஏக்கள் சாய் சரவணன் குமார், கல்யாண சுந்தரம், தீப்பாய்ந்தான் உட்பட பலரும் பங்கேற்றனர்.

பேரணி சுதேசி மில்லில் இருந்து புறப்பட்டு அண்ணாசாலை வழியாக வந்தது. காமராஜர் சிலையை தாண்டியவுடன் அண்ணாசாலை - கொசக்கடை வீதி சந்திப்பில் தடுப்புகளை வைத்து பொலிஸார் போராட்டக்காரர்களை தடுத்தனர். தடுப்புகளை தாண்ட முற்பட்ட பா.ஜ.கவினர் ராகுலை கண்டித்து கோஷங்களை எழுப்பினர். சிலர் ராகுல் புகைப்படத்தை கிழித்து எறிந்தும், தீயிட்டும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

அதைத்தொடர்ந்து அண்ணாசாலையில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் ராமலிங்கம் அங்கிருந்த வானில் ஏறி உரையாற்றுகையில்,

“இது டிரெய்லர்தான். விரைவில் பா.ஜ.க எழுச்சி மாநாடு நடத்தவுள்ளோம். முன்னாள் முதல்வர் நாராயணசாமியின் பொய் பிரச்சாரத்தை மக்கள் ஏற்க மாட்டார்கள். உக்ரைனில் நடிகர் ஆட்சிக்கு வந்ததால் தான் அந்நாடு அவல நிலைக்கு சென்றுள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு சவால்விடும் ஒரே தலைவர் மோடி தான்.

சரியான தலைவரை தேர்ந்தெடுப்பது அவசியம். கடந்த ஐந்து ஆண்டுகளில் புதுச்சேரியில் நெருக்கடியான நிலை இருந்தது. நாங்கள் வாக்குப் பெட்டியை திருடவோ, ஊழல் செய்யவோ அவசியம் இல்லை. இன்னும் 3 ஆண்டுகளில் பிரதமர் மோடி ஆசிரமம் சென்று விடுவார். அவருக்கு குடும்பமோ, குழந்தைகளுக்கு சொத்து சேர்க்க வேண்டியதில்லை. பிரதமர் ஒரு பைசா லஞ்சம் வாங்கியதாக யாரும் கூற முடியாது. நாங்கள் திராவிட மாடல் ஆட்சி அல்ல.

கடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் புதுச்சேரியில் வென்றதால் சிங்கிள் டீக்குக்கூட பயன் இல்லை. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும், முதல்வர் ரங்கசாமி முதல்வராவார். அ.தி.மு.க. கரத்தோடு இணைந்து பா.ஜ.க - என்.ஆர். காங்கிரஸ் ஆட்சியை புதுச்சேரியில் அமைப்போம்.” என்றார்.




# ஆப்கானிஸ்தான் நில நடுக்கம்; பலி எண்ணிக்கை 800 ஐ கடந்தது

கிழக்கு ஆப்கானிஸ்தானில் 6.0 மெக்னிடியூட் அளவில் ஏற்பட்ட நில அதிர்வில் பலியானோரின் எண்ணிக்கை 800ஐ கடந்துள்ளதுடன், சுமார் 3,000 பேர் காயமடைந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

குனார் மாகாணம் மிக மோசமான சேதத்தை சந்தித்துள்ளதுடன், முழு கிராமங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மலைப்பாங்கான நிலப்பரப்பு மற்றும் தடைபட்ட வீதிகள் காரணமாக மீட்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

சிக்கியுள்ளவர்களை மீட்க ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், உள்ளூர் மருத்துவமனைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.









# குவாட் தலைவர்கள் உச்சி மாநாட்டில் ட்ரம்ப் பங்கேற்பதற்கு வாய்ப்பில்லை



இந்தியாவில் இடம்பெறும், குவாட் தலைவர்கள் பங்குகொள்ளும் இந்தோ பசிபிக் பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பங்கு கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உறவுகளைப் பேணும் வகையில், இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அமைப்பு பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பினை வழங்குகிறது.

எனினும், சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குவாட் உருவாக்கப்பட்டதாக குறிப்பிட்டு, சீனா இந்த அமைப்பை எதிர்த்து வருகின்றது.

இந்தநிலையில், கடந்த ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவின் டெலாவரில் நடந்த 4 ஆம் குவாட் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

அந்த உச்சி மாநாட்டின் போது இந்த வருடத்திற்கான மாநாட்டை இந்தியா நடத்த வேண்டும் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய, 2025 குவாட் உச்சி மாநாடு இந்தியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இந்தியாவுக்கு எதிராக அதிக வரிகளை விதித்துள்ள நிலையில், டொனால்ட் ட்ரம்ப் அதில் பங்கேற்க வாய்ப்பில்லை என்று இந்தியச் செய்திகள் கூறுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.இன்று பதற்றம் காணப்படும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ் நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப்ப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




## புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம்

கொழும்பு, புதுச்செட்டித் தெரு சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் 60 ஆவது ஆண்டு பூர்த்தி விழா,நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாயி நிலையத்தில் இடம்பெற்றது.

அதிதிகள் வரவேற்பு மற்றும் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது, 60ஆண்டு நிறைவு ஞாபகச் சின்னத்தை, பிரதம அறங் காவலர் எஸ்.என்.உதயநாயகனிடம், பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி கையளிக்கின்றமையையும், சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வ குணதேவி சண்முகநாதனை, திருமதி சந்திரிகா உதயநாயகன் பாராட்டி கௌரவிக்கிறமையையும், நிகழ்வில் பங்கேற்ற, பொருளாளர் சுந்தரம் தவ குமார், அறங்காவலர் கோபால் ஜீவரட்னம், சாயி சமூக சேவையாளர் திருமதி பிரகாஷினி தர்மசுதன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.